රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව
அரச கணக்குகள் திணைக்களம்
Department of State Accounts


| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2017.07.04 |

**அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம்: 257/2017**

அமைச்சின் செயலாளர்கள்

திணைக்களத்தின் தலைவர்கள் மற்றும்

மாவட்ட செயலாளர்கள் யாவருக்கும்

**திறைசேரியின் கணக்கு கூற்றுகளுடன் திணைக்களத்தின் கணக்கு அறிக்கைகளை ஒப்பிடுதல்**

சகல நிறுவனங்களினாலும் ஒவ்வொரு கலண்டர் மாதத்தின் இறுதியிலேயே தமது திணைக்களத்திற்கு உரிய திறைசேரி மாதாந்த கணக்கு கூற்றுக்களை அரச கணக்குகள் திணைக்களத்தின் (www.treasury.gov.lk/department-of-state-account/links) இணையத்தளத்திற்கு சென்று பெற்றுக்கொள்ள வேண்டிய அதேவேளையில், அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை நிறுவனத்தின் கணக்காய்வுக்கு பொறுப்பான கணக்காய்வு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

02. சகல நிறுவனங்களும் அந்த நிறுவனத்திற்கு உரியதாக பின்வரும் கணக்குகளில் செம்மைத்தன்மை பற்றி திணைக்களத்தின் கணக்கு புத்தகங்களுடனும் திறைசேரியின் மாதாந்த கணக்கு கூற்றுக்களுடனும் ஒப்பிட்டு பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | கணக்கு விபரம் | | திறைசேரியின் கூற்றுகள் |
|---|---|---|---|
| 1. | செலவினக் கணக்குகள் | (*Table* 31, 33) | ஒப்பாகின்றது/ ஒப்பாகவில்லை |
| 2. | மிகைக் கணக்குகள் | (*Table* 31) | ஒப்பாகின்றது/ ஒப்பாகவில்லை |
| 3. | வருமானக் கணக்குகள். | (*Table* 66) | ஒப்பாகின்றது/ ஒப்பாகவில்லை |
| 4. | வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்துதல் | (*Table* 66) | ஒப்பாகின்றது/ ஒப்பாகவில்லை |
| 5. | வைப்புக் கணக்குகள் | (*Table* 67) | ஒப்பாகின்றது/ ஒப்பாகவில்லை |
| 6. | முற்பணக் கணக்குகள் | (*Table* 67, 68, 69) | ஒப்பாகின்றது/ ஒப்பாகவில்லை |
| 7. | பணி முற்பணக் கணக்குகள் | (*Table* 67) | ஒப்பாகின்றது/ ஒப்பாகவில்லை |
| 8. | நிலையான சொத்துக் கணக்குகள் | (*Table* 67, 72(1)) | ஒப்பாகின்றது/ ஒப்பாகவில்லை |
| 9. | நிதி ஒழுங்கு விதி 66 மற்றும் மேலதிக ஏற்பாடு | (*Table* 73) | ஒப்பாகின்றது/ ஒப்பாகவில்லை |
| 10. | வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்குகள் | (*Table* 67) | ஒப்பாகின்றது/ ஒப்பாகவில்லை |
| 11. | பிரதான பேரேட்டின் ஏனைய கணக்குகள் | (*Table* 67) | ஒப்பாகின்றது/ ஒப்பாகவில்லை |

3. திறைசேரியின் மாதாந்த கணக்குக் கூற்றுக்கள் மற்றும் திணைக்களத்தின் கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடும் போது அவற்றிற்கிடையில் வேறுபாடுகள் காணப்படுமாயின், அந்த வேறுபாட்டிற்குறிய

காரணங்களை ஆராய்ந்து அடுத்த மாதக் கணக்கு சுருக்கத்திற்கு முன்னர் துரிதமாக அந்த வேறுபாடுகளை திருத்திக் கொள்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. மாதாந்த கணக்குகளை ஒப்பிடும் போது வருடாந்த வரவு செலவு மதிப்பீடுகளின் மூலம் ஏற்பாடு செய்யப்படாதிருப்பின் செலவு விடயங்களுக்கும் வருமானத் தலைப்புகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட பற்று மற்றும் வரவு வைத்தல், வருடாந்த மதிப்பீட்டை தாண்டிய கணக்கு வைத்தல்கள் மற்றும்; ஏனைய கணக்குகளுக்கு மேற்கொள்ளப்பட்ட தவறான கணக்கு வைத்தல்கள் பற்றிய விசேட கவனத்தை செலுத்த வேண்டிய அதேவேளையில், அவ்வாறு பிழையான கணக்கு வைத்தல்களை அடுத்த மாதத்தின் கணக்கு சுருக்கத்தை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு முன்னர் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. மாதாந்த கணக்குகளை ஒப்பிடும் அறிக்கையை மேலும் தபால் மூலம் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டியதில்லை, அதேவேளையில் 2017 ஜூலை மாதத்திற்கு பின்னர் மாதாந்த கணக்குகளை ஒப்பிடும் அறிக்கயை அனுப்பும்போது newcigas.treasury.gov.lk எனும் இணையத்தளத்திற்கு சென்று அதில் பதிவு செய்ததன் பின்னர், அதிலுள்ள Monthly Account Reconciliation எனும் சுட்டியின் கீழ் உள்ள அறிவுரைகளுக்கு அமைவாக மாதாந்த கணக்குகளின் ஒப்பிடல் அறிக்கைகளை உள்ளடக்கி இந்த திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6. இந்த நிகழ்ச்சி திட்டத்தினூடாக மாதாந்த கணக்குகளை ஒப்பிடும் சுருக்கத்தை அனுப்பும் போது பிரச்சினைகள் ஏற்படுமாயின், newcigas2017@gmail.com வழியாக திணைக்களத்திற்கு மின்னஞ்சல் செய்தியொன்றை அனுப்புவதன் மூலம் அல்லது தொலைபேசி இலக்கம் 011-2484826 இன் மூலம் உதவிப் பணிப்பாளர் திரு. தர்சன் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

7. இந்த சுற்றறிக்கை இந்த விடயம் தொடர்பான இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சகல சுற்றறிக்கைகளையும் விஞ்சியதாக காணப்படும்.

ஒப்பம்: எஸ்.ஜீ. சேனாரத்ன

பணிப்பாளர் நாயகம்

பிரதி: கணக்காய்வாளர் அதிபதி